## முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

**SCOP .No. 79/2022**

2022 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதி PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி திரு.B.முருகேசன் பி.ஏ.,பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | வான்மதி | ஜாதி |
| த/க. பெயர் | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுக்கா | | வயது |
| மாவட்டம் | | |

PW1 - முதல் விசாரணை : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

ம.சா.1 ஆகிய நான் இந்த அசல் மனுவில் 1 ம் மனுதாரர். 2 ம் மனுதாரர் என் சகோதரி. என் தரப்பு முதல் விசாரணை நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். எங்கள் அப்பா தங்கமுத்து 27.10.2020 ல் காலமாகிவிட்டார். அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.1**. என் தாயார் கிரேஸ் பொன்னுதாயி கடந்த 28.05.2021 ல் காலமாகிவிட்டார் அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.2**. எங்களின் சகோதரர் வேந்தன் கடந்த 24.05.2021 ல் காலமாகிவிட்டார் அவரின் இறப்பு சான்றிதழ் கணினி வழி நகல் **ம.சா.ஆ.3**. எங்கள் சகோதரர் வேந்தனுக்கும், அவருடைய மனைவி ரேச்சல் நிர்மலாவிற்கும் கடந்த 01.04.2015 ல் நீதிமன்றத்தின் மூலம் விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது. அந்த விவாகரத்து உத்தரவு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.4**. என் சகோதரர் வேந்தனுக்கு எங்கள் இருவரை தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. எங்களுக்கும், என் சகோதரருக்கும் இடையேயான உறவுமுறையை காட்டும் சான்றிதழ் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.5**. என் சகோதரர் சேலம், ரீஜினல் பிராவிடட் பண்ட் கமிஷனர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்தார். ஆகவே அவரின் இறப்பின் பலன்களை அவரின் சகோதரிகளான நாங்களே சட்டப்படி பெறுவதற்கு உரிமையானவர்கள். ரீஜினல் பிராவிடட் பண்ட் கமிஷனர் அலுவலகத்தில் இருந்து இது சம்பந்தமாக வழங்கப்பட்ட

கடிதம் அசல் **ம.சா.ஆ.6**. என் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.7**. என் சகோதரியின் ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டது **ம.சா.ஆ.8**. இந்த ஆவணங்களை குறியீடு செய்து கொண்டு மனுப்படி தீர்ப்பு செய்ய பிரார்த்திக்கின்றேன்.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை : (வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)